**2018 – 2019 +2 கணக்குப்பதிவியல் 2 மார்க் வினா விடைகள்**

**பாடம் 1. இறுதிச் சரக்கிருப்பு**

**1.சரிக்கட்டுதல்கள்:** ஒரு நிறுவனத்தில் சரிக்கட்டப்பட வேண்டிய செலவுகளும், வருமானங்களும் பல இருப்பதைக் காணலாம். இத்தகைய இனங்கள் சரிக்கட்டப்படவில்லை எனில் இறுதிக் கணக்குகள் நிறுவனத்தின் செயல்பாட்டை உண்மையாக உணர்த்த இயலாது. இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்படுகையில் கணக்கேடுகளில் சேர்க்கப்பட வேண்டிய இத்தகைய இனங்கள் "சரிக்கட்டுதல்கள்" எனப்படுகின்றன

**2.சரிக்கட்டுப் பதிவு** இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சேர்க்கப்பட வேண்டிய சரிக்கட்டுதல்களை கணக்கேடுகளில் கொண்டுவருவதற்கு செய்யப்படும் குறிப்பேட்டுப் பதிவுகள் சரிக்கட்டுப் பதிவுகள் எனப்படும்.

**சரிக்கட்டுதல்களை புரிந்து கொள்ள எளிய வழி**

| சரிக்கட்டுதல்கள் | கருத்து | இ /நட்ட க/கு | | இருப்பு நிலைக் குறிப்பு | சரிக் கட்டு பதிவு | மாதிரி பதிவு |
|---|---|---|---|---|---|---|
| 1.கொடுபட வேண்டிய செலவுகள் | செலுத்தப்படாமல் இருந்தால் | + | பற்று | பொறுப்பு | பின் | சம்பள க/கு ப.<br>கொடுபட வேண்டிய சம்பள க/கு |
| 2.முன் கூட்டி செலுத்திய செலவுகள் | செலுத்தியிருப்பின் | - | பற்று | சொத்து | முன் | முன் கூட்டி செலுத்திய காப்பீடு முனைம க/கு ப.<br>காப்பீடு க/கு |
| 3.கூடியுள்ள (ஈட்டிய) வருமானம் | பெறப்படாமல் இருந்தால் | + | வரவு | சொத்து | முன் | கூடியுள்ள கழிவு க/கு ப.<br>கழிவு க/கு |
| 4.முன் கூட்டி பெற்ற வருமானம் | எதிர்காலத்தில் செய்ய வேண்டிய பணி சார்ந்திருப்பின் | - | வரவு | பொறுப்பு | பின் | பெற்ற வாடகை க/கு ப.<br>முன் கூட்டி பெற்ற வாடகை க/கு |
| 5.முதல் மீது வட்டி | | + | பற்று | பொறுப்பு | முன் | முதல் மீது வட்டி க/கு ப.<br>முதல் க/கு |
| 6. எடுப்பு மீது வட்டி | | - | வரவு | பொறுப்பு | பின் | முதல் க/கு ப.<br>எடுப்பு மீது வட்டி க/கு |
| 7.கொடுபட வேண்டிய கடன் மீதான வட்டி | **சரிக்கட்டுதல்கள் 1ஐ போன்று** | | | | | வங்கி கடன் மீதான வட்டி க/கு ப.<br>கொடுபட வேண்டிய வட்டி க/கு |
| 8.முதலீடுகள் மீதான வட்டி | **சரிக்கட்டுதல்கள் 3ஐ போன்று** | | | | | முதலீடுகள் மீது கூடியுள்ள வட்டி க/கு ப.<br>பெற்ற வட்டி க/கு |

**3.இறுதிச் சரக்கிருப்பு:** கணக்காண்டு இறுதியில் விற்காமல் உள்ள சரக்கின் மதிப்பு இறுதிச் சரக்கிருப்பு எனப்படும். அடக்கவிலை அல்லது சந்தைவிலை இதில் எது குறைவோ அந்த விலையில் இறுதிச் சரக்கிருப்பு மதிப்பிடப்படும்.

**4. இறுதிச் சரக்கிருப்பு இறுதிக் கணக்கில் எங்கு தோன்றும்:** வியாபாரக் கணக்கின் வரவுப் பக்கத்திலும். இருப்புநிலைக் குறிப்பின் சொத்துகள் பக்கத்திலும் தோன்றும்.

**5. 31.3.2000அன்று இருப்பாய்விற்கு வெளியே காட்டப்பட்டுள்ள இறுதிச்சரக்கிருப்பின்மதிப்பு ரூ.5000இதற்க்கான சரிக்கட்டுப்பதிவு தருக.**

| நாள் | விவரம் | பே.ப.எ. | பற்று ரூ | வரவு ரூ |
|---|---|---|---|---|
| 31 மார்ச் 2000 | இறுதிச் சரக்கிருப்பு க/கு ப.<br>வியாபாரக் க/கு<br>(இறுதிச் சரக்கிருப்பு பதியப்பட்டது) | | 5000 | 5000 |

**6. 31.3.2000 அன்று இருப்பாய்விற்கு வெளியே காட்டப்பட்டுள்ள இறுதிச் சரக்கிருப்பின் மதிப்பு ரூ.5000 இது இறுதிக் கணக்கில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டுக.**

**ப. 31.03.2000க்கான வியாபார க/கு வ.**

| விவரம் | தொகை ரூ | விவரம் | தொகை ரூ |
|---|---|---|---|
| | | இறுதிச் சரக்கிருப்பு | 5000 |

**31.03.2000க்கான இருப்பு நிலைக் குறிப்பு**

| பொறுப்புகள் | தொகை ரூ | சொத்துக்கள் | தொகை ரூ |
|---|---|---|---|
| | | இறுதிச் சரக்கிருப்பு | 5000 |

**7.கொடுபட வேண்டிய செலவுகள்:** இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்படும் கணக்காண்டிற்கு உரிய செலவினங்கள் அந்த கணக்காண்டில் செலுத்தப்படாமலிருந்தால் அவை கொடுபட வேண்டிய செலவுகள் எனப்படும்.

**8. கொடுபட வேண்டிய செலவுகள் இறுதிக் கணக்கில் எங்கு தோன்றும்:** குறிப்பிட்ட செலவுடன் கூட்டப்பட்டு, இலாப நட்டக் கணக்கின் பற்றுப் பக்கத்திலும், இருப்பு நிலைக் குறிப்பின் பொறுப்புகள் பக்கத்திலும் தோன்றும்.

**9 இருப்பாய்வின்படி சம்பளம் கொடுத்தது ரூ.22,000. சரிக்கட்டுதல் : மார்ச் 2004-க்குரிய சம்பளம் கொடுபடாதது ரூ.2,000. இதற்க்கான சரிக்கட்டுப்பதிவு தருக.**

| நாள் | விவரம் | பே.ப.எ. | பற்று ரூ | வரவு ரூ |
|---|---|---|---|---|
| 31 மார்ச் 2004 | சம்பள க/கு ப.<br>கொடுபட வேண்டிய சம்பள க/கு<br>(கொடுபட வேண்டிய மார்ச் மாத சம்பளம்) | | 2000 | 2000 |

**10. இருப்பாய்வின்படி சம்பளம் கொடுத்தது ரூ.22,000. சரிக்கட்டுதல் : மார்ச் 2004-க்குரிய சம்பளம் கொடுபடாதது ரூ.2,000. இது இறுதிக் கணக்கில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டுக.**

**ப. 31.03.2004க்கான இ/ந க/கு வ.**

| விவரம் | | தொகை ரூ | விவரம் | தொகை ரூ |
|---|---|---|---|---|
| சம்பளம்<br>(+) கொடுபட வேண்டிய சம்பளம் | 22000<br>2000 | 24000 | | |

**31.03.2004க்கான இருப்பு நிலைக் குறிப்பு**

| பொறுப்புகள் | தொகை ரூ | சொத்துக்கள் | தொகை ரூ |
|---|---|---|---|
| கொடுபட வேண்டிய சம்பளம் | 2000 | | |

**11. முன்கூட்டிச் செலுத்திய செலவுகள்** : செலவுகள் முன்கூட்டியே செலுத்தப்பட்டிருப்பின் அவை முன்கூட்டிச் செலுத்திய (பயன்தீரா) செலவுகள் எனப்படும்.

**12.முன்கூட்டிச் செலுத்திய செலவுகள் இறுதிக் கணக்கில் எங்கு தோன்றும்:** குறிப்பிட்ட செலவிலிருந்து கழிக்கப்பட்டு இலாபநட்டக்கணக்கின் பற்றுப்பக்கத்திலும், இருப்புநிலைக்குறிப்பின் சொத்துகள்பக்கத்திலும் தோன்றும்.

**13. மார்ச் 31 2004 ம் நாளுக்குரிய இருப்பாய்வின்படி செலுத்தப்பட்ட காப்பீட்டு முனைமம் ரூ.20,000. சரிக்கட்டுதல் : முன்கூட்டிச் செலுத்திய காப்பீட்டு முனைமம் ரூ.7,500. இதற்க்கான சரிக்கட்டுப்பதிவு தருக.**

| நாள் | விவரம் | பே.ப.எ. | பற்று ரூ | வரவு ரூ |
|---|---|---|---|---|
| 31 மார்ச் 2004 | முன் கூட்டி செலுத்திய காப்பீடு க/கு ப.<br>காப்பீடு முனைமம் க/கு<br>(முன்கூட்டிசெலுத்திய காப்பீடு முனைமம்) | | 7500 | 7500 |

**14. மார்ச் 31 2004 ம் நாளுக்குரிய இருப்பாய்வின்படி செலுத்தப்பட்ட காப்பீட்டு முனைமம் ரூ.20,000. சரிக்கட்டுதல் : முன்கூட்டிச் செலுத்திய காப்பீட்டு முனைமம் ரூ.7,500. இது இறுதிக் கணக்கில் எவ்வாறு தோன்றும்**

**ப. 31.03.2004க்கான இ/ந க/கு வ.**

| விவரம் | | தொகை ரூ | விவரம் | தொகை ரூ |
|---|---|---|---|---|
| காப்பீடு முனைமம்<br>(-)முன் கூட்டி செலுத்திய காப்பீடு | 20000<br>7500 | 12500 | | |

**31.03.2004க்கான இருப்பு நிலைக் குறிப்பு**

| பொறுப்புகள் | தொகை ரூ | சொத்துக்கள் | தொகை ரூ |
|---|---|---|---|
| | | முன் கூட்டி செலுத்திய காப்பீடு | 7500 |

**15.கூடியுள்ள வருமானம் (பெற வேண்டிய வருமானம்)** ஈட்டிய வருமானம் உரிய கணக்காண்டில் பெறப்படாமல் இருந்தால் கூடியுள்ள வருமானம் எனப்படும்.

**16.கூடியுள்ள வருமானம் (பெற வேண்டிய வருமானம்) இறுதிக் கணக்கில் எங்கு தோன்றும்:**

1. குறிப்பிட்ட வருமானத்துடன் கூட்டப்பட்டு இலாப நட்டக் கணக்கின் வரவுப் பக்கத்திலும்,
2. இருப்புநிலைக் குறிப்பின் சொத்துகள் பக்கத்திலும் தோன்றும்.

**17. 31.3.2004-ஆம் நாளுக்குரிய இருப்பாய்வின் வரவுப் பக்கம் ரூ.8,000 கழிவு பெற்றதாக வெளிக்காட்டியது. சரிக்கட்டுதல் : கூடியுள்ள கழிவு இன்னமும் பெறப்படாதது ரூ.2,000. இதற்க்கான சரிக்கட்டுப்பதிவு தருக.**

| நாள் | விவரம் | பே.ப.எ. | பற்று ரூ | வரவு ரூ |
|---|---|---|---|---|
| 31 மார்ச் 2004 | கூடியுள்ள கழிவு க/கு ப.<br>கழிவு க/கு<br>(கூடியுள்ள கழிவு பெறப்படாதது) | | 2000 | 2000 |

**18. 31.3.2004-ஆம் நாளுக்குரிய இருப்பாய்வின் வரவுப் பக்கம் ரூ.8,000 கழிவு பெற்றதாக வெளிக்காட்டியது. சரிக்கட்டுதல் : கூடியுள்ள கழிவு இன்னமும் பெறப்படாதது ரூ.2,000. இது இறுதிக் கணக்கில் எவ்வாறு தோன்றும்**

**ப. 31.03.2004க்கான இ/ந க/கு வ.**

| விவரம் | | தொகை ரூ | விவரம் | | தொகை ரூ |
|---|---|---|---|---|---|
| | | | பெற்ற கழிவு<br>(+) கூடியுள்ள கழிவு | 8000<br>2000 | 10000 |

**31.03.2004க்கான இருப்பு நிலைக் குறிப்பு**

| பொறுப்புகள் | தொகை ரூ | சொத்துக்கள் | தொகை ரூ |
|---|---|---|---|
| | | கூடியுள்ள கழிவு | 2000 |

**19. முன்கூட்டிப் பெற்ற வருமானங்கள்:** குறிப்பிட்ட கணக்காண்டில் பெற்ற வருமானம் எதிர்காலத்தில் செய்யப்பட வேண்டிய பணி சார்ந்ததாக இருப்பின் அது முன்கூட்டிப் பெற்ற வருமானம் எனப்படும்.

**20. முன்கூட்டிப் பெற்ற வருமானங்கள் இறுதிக் கணக்கில் எங்கு தோன்றும்:** 1. குறிப்பிட்ட வருமானத்திலிருந்து கழிக்கப்பட்டு, இலாப நட்டக் கணக்கின் வரவுப் பக்கத்திலும், 2. இருப்புநிலைக் குறிப்பின் பொறுப்புகள் பக்கத்திலும் தோன்றும்.

**21. 2004 மார்ச் 31ஆம் நாளைய இருப்பாய்வின் படி வாடகை பெற்றது ரூ.25,000. சரிக்கட்டுதல் : முன்கூட்டிப் பெற்ற வாடகை ரூ.5,000. இதற்க்கான சரிக்கட்டுப்பதிவு தருக.**

| நாள் | விவரம் | பே.ப.எ. | பற்று ரூ | வரவு ரூ |
|---|---|---|---|---|
| 31 மார்ச் 2004 | பெற்ற வாடகை க/கு ப.<br>முன் கூட்டி பெற்ற வாடகை க/கு<br>(கூடியுள்ள கழிவு பெறப்படாதது) | | 5000 | 5000 |

**22. 2004 மார்ச் 31ஆம் நாளைய இருப்பாய்வின் படி வாடகை பெற்றது ரூ.25,000. சரிக்கட்டுதல் : முன்கூட்டிப் பெற்ற வாடகை ரூ.5,000. இது இறுதிக் கணக்கில் எவ்வாறு தோன்றும்**

**ப. 31.03.2004க்கான இ/ந க/கு வ.**

| விவரம் | | தொகை ரூ | விவரம் | | தொகை ரூ |
|---|---|---|---|---|---|
| | | | பெற்ற வாடகை<br>(-) முன் கூட்டிய பெற்ற வாடகை | 25000<br>5000 | 20000 |

**31.03.2004க்கான இருப்பு நிலைக் குறிப்பு**

| பொறுப்புகள் | தொகை ரூ | சொத்துக்கள் | தொகை ரூ |
|---|---|---|---|
| முன் கூட்டி பெற்ற வாடகை | **5000** | | |

**23. முதல் மீது வட்டி :** வியாபார நிறுவனம் முதலினை உரிமையாளரிடம் இருந்து கடனாக பெற்றதாகக் கொள்ளப்படுவதால் முதல் மீது வட்டி அனுமதிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. வியாபாரம் உண்மையிலேயே இலாபத்தில் இயங்குகிறதா என்பதைக் கண்டறிவதற்காக முதல் மீது வட்டி ஒரு குறிப்பிட்ட சதவீதத்தில் கணக்கிடப்பட்டு செலவாகப் பதியப்படுகிறது.

**24. முதல் மீது வட்டி இறுதிக் கணக்கில் எங்கு தோன்றும்:** 1. இலாபநட்டக் கணக்கின் பற்றுப் பக்கத்திலும் 2. முதலுடன் கூட்டப்பட்டு, இருப்புநிலைக் குறிப்பின் பொறுப்புகள் பக்கத்திலும் தோன்றும்.

**25. 31.3.2004ஆம் நாளைய இருப்பாய்வின் படி முதல் ரூ.4,00,000. சரிக்கட்டுதல் : முதல் மீது வட்டி 6% அனுமதிக்க. இதற்க்கான சரிக்கட்டுப்பதிவு மற்றும் மாற்றுப் பதிவு தருக.**

| நாள் | விவரம் | பே.ப.எ. | பற்று ரூ | வரவு ரூ |
|---|---|---|---|---|
| 31 மார்ச் 2004 | முதல் மீது வட்டி க/கு ப.<br>முதல் க/கு<br>(முதல் மீது வட்டி) | | 24000 | 24000 |

**மாற்றுப் பதிவு**

| நாள் | விவரம் | பே.ப.எ. | பற்று ரூ | வரவு ரூ |
|---|---|---|---|---|
| 31 மார்ச் 2004 | இ/ந க/கு ப.<br>முதல் மீது வட்டி க/கு<br>(முதல் மீது வட்டி இ/ந கணக்கிற்கு மாற்றப்பட்டது) | | 24000 | 24000 |

**26. 31.3.2004ஆம் நாளைய இருப்பாய்வின் படி முதல் ரூ.4,00,000. சரிக்கட்டுதல் : முதல் மீது வட்டி 6% அனுமதிக்க. இது இறுதிக் கணக்கில் எவ்வாறு தோன்றும்.**

**ப. 31.03.2004க்கான இ/ந க/கு வ.**

| விவரம் | | தொகை ரூ | விவரம் | | தொகை ரூ |
|---|---|---|---|---|---|
| முதல் மீது வட்டி | | 24000 | | | |

**31.03.2004க்கான இருப்பு நிலைக் குறிப்பு**

| பொறுப்புகள் | தொகை ரூ | தொகை ரூ | சொத்துக்கள் | தொகை ரூ |
|---|---|---|---|---|
| முதல்<br>(+) முதல் மீது வட்டி | 400000<br>24000 | **424000** | | |

**27. எடுப்புகள் மீது வட்டி:** உரிமையாளர் தனது சொந்தச் செலவுக்காக தொழிலிலிருந்து பணம் எடுப்பது எடுப்புகள் எனப்படும். நிறுவனம் முதல் மீது வட்டி அளிப்பதால், எடுப்புகள் மீது வட்டி உரிமையாளரிடமிருந்து பெறப்படுகிறது. எடுப்புகள் மீது வட்டி தொழிலுக்கு வருமானமாக அமைந்து, உரிமையாளரின் முதலைக் குறைக்கிறது.

**28. எடுப்பு மீதான வட்டி இறுதிக் கணக்கில் எங்கு தோன்றும்:** 1. இலாப நட்டக் கணக்கின் வரவுப் பக்கத்திலும், 2. எடுப்புடன் கூட்டப்பட்டு அத்தொகை இறுதியில் முதலிலிருந்து கழிக்கப்பட்டு இருப்புநிலைக் குறிப்பின் பொறுப்புகள் பக்கத்தில் தோன்றும்.

**29. 31.3.2004 அன்றைய இருப்பாய்வின் படி முதல் ரூ4,00,000, எடுப்பு ரூ30,000 சரிக்கட்டுதல் : எடுப்பு மீது வட்டி 5% கணக்கிடுக. இதற்க்கான சரிக்கட்டுப்பதிவு மற்றும் மாற்றுப் பதிவு தருக.**

| நாள் | விவரம் | பே.ப.எ. | பற்று ரூ | வரவு ரூ |
|---|---|---|---|---|
| 31 மார்ச் 2004 | முதல் க/கு ப.<br>எடுப்பு மீது வட்டி க/கு<br>(எடுப்பு மீது வட்டி) | | 1500 | 1500 |

**மாற்றுப் பதிவு**

| நாள் | விவரம் | பே.ப.எ. | பற்று ரூ | வரவு ரூ |
|---|---|---|---|---|
| 31 மார்ச் 2004 | எடுப்பு மீது வட்டி க/கு ப.<br>இ/ந க/கு<br>(எடுப்பு மீது வட்டி இ/ந கணக்கிற்கு மாற்றப்பட்டது) | | 1500 | 1500 |

**30. 31.3.2004 அன்றைய இருப்பாய்வின் படி முதல் ரூ4,00,000, எடுப்பு ரூ30,000 சரிக்கட்டுதல் : எடுப்பு மீது வட்டி 5% கணக்கிடுக. இது இறுதிக் கணக்கில் எவ்வாறு தோன்றும்.**

**ப. 31.03.2004க்கான இ/ந க/கு வ.**

| விவரம் | | தொகை ரூ | விவரம் | | தொகை ரூ |
|---|---|---|---|---|---|
| | | | ஏடுப்பு மீது வட்டி | | 1500 |

**31.03.2004க்கான இருப்பு நிலைக் குறிப்பு**

| பொறுப்புகள் | தொகை ரூ | தொகை ரூ | தொகை ரூ | சொத்துக்கள் | தொகை ரூ |
|---|---|---|---|---|---|
| முதல் | | 400000 | | | |
| (-) எடுப்பு | 30000 | | | | |
| எமீவ | 1500 | 31500 | **368500** | | |

**31. கடன் மீது வட்டி (கொடுபட வேண்டியது)** வங்கிகள், நிதி நிறுவனங்கள் மற்றும் வெளியாரிடமிருந்து வியாபாரத்திற்காக பணம் பெறுதல் ஆகியவை கடன் எனப்படுகிறது. கடனுக்காகச் செலுத்த வேண்டிய வட்டி வியாபாரத்திற்கு ஒரு செலவினமாகும்.

**32. கொடுபட வேண்டிய கடன் மீதான வட்டி இறுதிக் கணக்கில் எங்கு தோன்றும்:**

1. உரிய வட்டியுடன் கூட்டப்பட்டு இலாப நட்டக் கணக்கின் பற்றுப் பக்கத்திலும்,
2. குறிப்பிட்ட கடனுடன் கூட்டப்பட்டு இருப்புநிலைக் குறிப்பின் பொறுப்புகள் பக்கத்திலும் தோன்றும்.

**33. 31.3.2004 இருப்பாய்வின் படி வங்கிக் கடன் 10% ரூ. 4,00,000 வட்டி கொடுத்தது ரூ. 14,000 சரிக்கட்டுதல் : கொடுக்கப்பட வேண்டிய வங்கிக்கடன் மீதான வட்டிக்கு வகை செய்க.**

| நாள் | விவரம் | பே.ப.எ. | பற்று ரூ | வரவு ரூ |
|---|---|---|---|---|
| 31 மார்ச் 2004 | வங்கி கடன் மீதான வட்டி க/கு ப.<br>கொடுபட வேண்டிய வட்டி க/கு<br>(கொடுபட வேண்டிய கடன் மீது வட்டி) | | 26000 | 26000 |

**33. 31.3.2004 இருப்பாய்வின் படி வங்கிக் கடன் 10% ரூ. 4,00,000 வட்டி கொடுத்தது ரூ. 14,000 சரிக்கட்டுதல் : கொடுக்கப்பட வேண்டிய வங்கிக்கடன் மீதான வட்டிக்கு வகை செய்க. இது இறுதிக் கணக்கில் எவ்வாறு தோன்றும்.**

**ப. 31.03.2004க்கான இ/ந க/கு வ.**

| விவரம் | தொகை ரூ | தொகை ரூ | விவரம் | | தொகை ரூ |
|---|---|---|---|---|---|
| வட்டி | 14000 | | | | |
| (+) கொடுபட வேண்டியது | 26000 | **40000** | | | |

**31.03.2004க்கான இருப்பு நிலைக் குறிப்பு**

| பொறுப்புகள் | தொகை ரூ | தொகை ரூ | சொத்துக்கள் | தொகை ரூ |
|---|---|---|---|---|
| வங்கிக்கடன் 10% | 400000 | | | |
| (+) கொடுபடவேண்டியது | 26000 | | | |
| | | **426000** | | |

**34. முதலீடுகள் மீதான வட்டி:** முதலீடு மீது பெற வேண்டிய வட்டி தொழிலுக்கு வருவாயாகும்.

**35. முதலீடுகள் மீதான வட்டி இறுதிக் கணக்கில் எங்கு தோன்றும்:** 1.உரிய வட்டியுடன் கூட்டப்பட்டு இலாப நட்டக் கணக்கின் வரவுப் பக்கத்திலும், 2. முதலீடுகளுடன் கூட்டப்பட்டு இருப்புநிலைக் குறிப்பின் சொத்துகள் பக்கத்திலும் தோன்றும்.

**36. 31.3.04 அன்றைய இருப்பாய்வின் படி முதலீடுகள் 10% ரூ. 5,00,000 முதலீடுகள் மீது பெற்ற வட்டி ரூ. 40,000 இதற்கான சரிக்கட்டுப் பதிவு தருக.**

| நாள் | விவரம் | பே.ப.எ. | பற்று ரூ | வரவு ரூ |
|---|---|---|---|---|
| 31 மார்ச் 2004 | முதலீடுகள் மீது கூடியுள்ள வட்டி க/கு ப.<br>பெற்ற வட்டி க/கு<br>(முதலீடுகள் மீது கூடியுள்ள வட்டி) | | 10000 | 10000 |

**36. 31.3.04 அன்றைய இருப்பாய்வின் படி முதலீடுகள் 10% ரூ. 5,00,000 முதலீடுகள் மீது பெற்ற வட்டி ரூ. 40,000 இது இறுதிக் கணக்கில் எவ்வாறு தோன்றும்.**

**ப. 31.03.2004க்கான இ/ந க/கு வ.**

| விவரம் | தொகை ரூ | தொகை ரூ | விவரம் | | தொகை ரூ |
|---|---|---|---|---|---|
| | | | பெற்ற வட்டி<br>(+) பெற வேண்டியது | 40000<br>10000 | **50000** |

**31.03.2004க்கான இருப்பு நிலைக் குறிப்பு**

| பொறுப்புகள் | தொகை ரூ | தொகை ரூ | சொத்துக்கள் | தொகை ரூ | தொகை ரூ |
|---|---|---|---|---|---|
| | | | முதலீடுகள்<br>(+) பெற வேண்டியது | 500000<br>10000 | **510000** |

**37.தேய்மானம் :** பயன்படுத்துதல் அல்லது வழக்கொழிவு காரணமாக நிலைச் சொத்தின் மதிப்பில் உண்டாகும் குறைவு தேய்மானம் எனப்படுகிறது. பொதுவாக நிலைச்சொத்தின் மீது ஒரு குறிப்பிட்ட சதவீதம் தேய்மானமாக நீக்கப்படுகிறது.

**38.தேய்மானம் இறுதிக் கணக்கில் எங்கு தோன்றும்**

1. இலாபநட்டக் கணக்கின் பற்றுப் பக்கத்திலும்
2. குறிப்பிட்ட சொத்திலிருந்து கழிக்கப்பட்டு, இருப்புநிலைக் குறிப்பின் சொத்துகள் பக்கத்திலும் தோன்றும்.

**39. 31.3.2004-ஆம் நாளைய இருப்பாய்வின்படி அறைகலன் மதிப்பு ரூ.60,000. சரிக்கட்டுதல் : அறைகலன் மீது 10% தேய்மானம் நீக்கப்பட வேண்டும். இதற்கான சரிக்கட்டுப் பதிவு மற்றும் மாற்றுப் பதிவு தருக.**

| நாள் | விவரம் | பே.ப.எ. | பற்று ரூ | வரவு ரூ |
|---|---|---|---|---|
| 31 மார்ச் 2004 | தேய்மான க/கு ப.<br>அறைகலன் க/கு<br>(அறைகலன் மீது தேய்மானம்) | | 6000 | 6000 |

**மாற்றுப் பதிவு**

| நாள் | விவரம் | பே.ப.எ. | பற்று ரூ | வரவு ரூ |
|---|---|---|---|---|
| 31 மார்ச் 2004 | இ/ந க/கு ப.<br>தேய்மானம் க/கு<br>(தேய்மானம் இ/ந கணக்கிற்கு மாற்றப்பட்டது) | | 6000 | 6000 |

**40. 31.3.2004-ஆம் நாளைய இருப்பாய்வின்படி அறைகலன் மதிப்பு ரூ.60,000. சரிக்கட்டுதல் : அறைகலன் மீது 10% தேய்மானம் நீக்கப்பட வேண்டும். இது இறுதிக் கணக்கில் எவ்வாறு தோன்றும்.**

**ப. 31.03.2004க்கான இ/ந க/கு வ.**

| விவரம் | | தொகை ரூ | விவரம் | | தொகை ரூ |
|---|---|---|---|---|---|
| அறைகலன் மீதான தேய்மானம் | | **6000** | | | |

**31.03.2004க்கான இருப்பு நிலைக் குறிப்பு**

| பொறுப்புகள் | | தொகை ரூ | சொத்துக்கள் | தொகை ரூ | தொகை ரூ |
|---|---|---|---|---|---|
| | | | அறைகலன்<br>(-) தேய்மானம் | 60000<br>6000 | **54000** |

**41. வாராக் கடன் :** திரும்பப் பெற இயலாத கடன் வாராக் கடன் எனப்படும். வியாபாரத்திற்கு ஒரு இழப்பாகும்.

**42. வாராக்கடன் இறுதிக் கணக்கில் எங்கு தோன்றும்** 1. இலாபநட்டக் கணக்கின் பற்றுப் பக்கத்திலும்,
2. பற்பல கடனாளிகளிலிருந்து கழிக்கப்பட்டு, இருப்புநிலைக் குறிப்பின் சொத்துகள் பக்கத்திலும் தோன்றும்.

**43. 2004 மார்ச் 31ஆம் நாளன்றைய இருப்பாய்வின் படி பற்பல கடனாளிகள் ரூ.52,500. சரிக்கட்டுதல் : வாராக்கடன் ரூ.2,500 போக்கெழுதுக. இதற்கான சரிக்கட்டுப் பதிவு மற்றும் மாற்றுப் பதிவு தருக.**

| நாள் | விவரம் | பே.ப.எ. | பற்று ரூ | வரவு ரூ |
|---|---|---|---|---|
| 31 மார்ச் 2004 | வாராக்கடன் க/கு ப.<br>பற்பல கடனாளிகள் க/கு<br>(வாராக்கடன் போக்கெழுதியது) | | 2500 | 2500 |

**மாற்றுப் பதிவு**

| நாள் | விவரம் | பே.ப.எ. | பற்று ரூ | வரவு ரூ |
|---|---|---|---|---|
| 31 மார்ச் 2004 | இ/ந க/கு ப.<br>வாராக்கடன் க/கு<br>(வாராக்கடன் இ/ந கணக்கிற்கு மாற்றப்பட்டது) | | 2500 | 2500 |

**44. 2004 மார்ச் 31ஆம் நாளன்றைய இருப்பாய்வின் படி பற்பல கடனாளிகள் ரூ.52,500. சரிக்கட்டுதல் : வாராக்கடன் ரூ.2,500 போக்கெழுதுக. இது இறுதிக் கணக்கில் எவ்வாறு தோன்றும்.**

**ப. 31.03.2004க்கான இ/ந க/கு வ.**

| விவரம் | | தொகை ரூ | விவரம் | | தொகை ரூ |
|---|---|---|---|---|---|
| வாராக்கடன் | | **2500** | | | |

**31.03.2004க்கான இருப்பு நிலைக் குறிப்பு**

| பொறுப்புகள் | | தொகை ரூ | சொத்துக்கள் | தொகை ரூ | தொகை ரூ |
|---|---|---|---|---|---|
| | | | பற்பல கடனாளிகள்<br>(-) வாராக்கடன் | 52500<br>2500 | <br>**50000** |

**45. வாரா ஐயக்கடன் ஒதுக்கு :** 1. ஒவ்வொரு நிறுவனத்திலும் ஏற்கனவே போக்கெழுதப்பட்ட வாராக் கடனுக்கும் அதிகமாக ஒரு குறிப்பிட்ட சதவீதம் வாரக்கடன் நேர்வது இயல்பு.

2.இருப்புநிலைக் குறிப்பில் பற்பல கடனாளிகளின் உண்மையான தொகையைக் காட்ட வேண்டுமெனில், வாரா ஐயக்கடன் ஒதுக்கு சரிக்கட்டப் பட வேண்டும்.

3.கடந்த கால அனுபவத்தின் அடிப்படையில் பற்பல கடனாளிகள் மீது ஒரு குறிப்பிட்ட சதவீதம் வாரா மற்றும் ஐயக்கடன் ஒதுக்கிற்காக ஒதுக்கப்படும்.

**46. யார் மீது வாரா ஐயக் கடன் ஒதுக்கு கணக்கிடப்படும் :** இறுதிக் கணக்குகள் தயாரிக்கையில், சரிக்கட்டுதலில் கொடுக்கப்பட்டுள்ள போக்கெழுதப்பட வேண்டிய வாராக் கடன் பற்பல கடனாளிகளிலிருந்து கழிக்கப்பட வேண்டும். மீதமுள்ள பற்பல கடனாளிகள் (பற்பல கடனாளிகள் - வாராக்கடன் போக்கெழுதப்பட்டது) மீது வாரா மற்றும் ஐயக்கடன் ஒதுக்கு கணக்கிடப்படும்.

**47. வாரா மற்றும் ஐயக்கடன் ஒதுக்கு இறுதிக் கணக்கில் எங்கு தோன்றும்:**

1. இலாபநட்டக் கணக்கின் பற்றுப் பக்கத்திலும்,
2. பற்பல கடனாளிகளிலிருந்து (போக்கெழுதப்பட வேண்டிய வாராக்கடன் ஏதுமிருப்பின் அதனைக் கழித்த பின்னர்) கழிக்கப்பட்டு, இருப்புநிலைக் குறிப்பின் சொத்துகள் பக்கத்திலும் தோன்றும்.

**48. 31.3.2004 அன்றைய இருப்பாய்வின்படி பற்பல கடனாளிகள் ரூ.60,000. சரிக்கட்டுதல் : பற்பல கடனாளிகள் மீது 5% வாரா ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்கப்பட வேண்டும். இதற்கான சரிக்கட்டுப் பதிவு தருக.**

| நாள் | விவரம் | பே.ப.எ. | பற்று ரூ | வரவு ரூ |
|---|---|---|---|---|
| 31 மார்ச் 2004 | இ/ந க/கு ப.<br>வாரா ஐயக்கடன் க/கு<br>(வாராஐயக்கடன் ஒதுக்கு) | | 3000 | 3000 |

**49. 31.3.2004 அன்றைய இருப்பாய்வின்படி பற்பல கடனாளிகள் ரூ.60,000. சரிக்கட்டுதல் : பற்பல கடனாளிகள் மீது 5% வாரா ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்கப்பட வேண்டும். இது இறுதிக் கணக்கில் எவ்வாறு தோன்றும்.**

**ப. 31.03.2004க்கான இ/ந க/கு வ.**

| விவரம் | | தொகை ரூ | விவரம் | | தொகை ரூ |
|---|---|---|---|---|---|
| வாரா ஐயக்கடன் | | **3000** | | | |

**31.03.2004க்கான இருப்பு நிலைக் குறிப்பு**

| பொறுப்புகள் | | தொகை ரூ | சொத்துக்கள் | தொகை ரூ | தொகை ரூ |
|---|---|---|---|---|---|
| | | | பற்பல கடனாளிகள்<br>(-) வாரா ஐயக்கடன் | 60000<br>3000 | <br>**57000** |

**50. கடனாளிகள் மீதான தள்ளுபடி ஒதுக்கு :** கடனாளிகள் உரிய நேரத்தில் பணம் செலுத்துவதை ஊக்குவிப்பதற்காக அவர்களுக்கு ரொக்கத் தள்ளுபடி வழங்கப்படுகிறது. வாரா ஐயக்கடன் ஒதுக்கிற்குப் பின் மீதமுள்ள கடனாளிகள் **திடமான கடனாளிகள்** (Good debtors) என அழைக்கப்படுகின்றனர். அவர்களில் சிலர் உரிய நேரத்தில் பணத்தைச் செலுத்தி ரொக்கத் தள்ளுபடியைப் பெற விரும்புவர். எனவே திடமான கடனாளிகள் மீது ஒரு குறிப்பிட்ட சதவீதம் தள்ளுபடி ஒதுக்கு உருவாக்கப்பட வேண்டும்.

**51. கடனாளிகள் மீதான தள்ளுபடி ஒதுக்கு இறுதிக் கணக்கில் எங்கு தோன்றும்:**

1. இலாபநட்டக் கணக்கின் பற்றுப் பக்கத்திலும்,
2. பற்பல கடனாளிகளிலிருந்து கழிக்கப்பட்டு, இருப்புநிலைக் குறிப்பின் சொத்துகள் பக்கத்திலும் தோன்றும்.

**52. 2004 மார்ச் 31ஆம் நாளன்றைய இருப்பாய்வின் படி பற்பல கடனாளிகள் ரூ.45,000. சரிக்கட்டுதல் : கடனாளிகள் மீது 2% தள்ளுபடி ஒதுக்கு உருவாக்கப்பட வேண்டும். இதற்கான சரிக்கட்டுப் பதிவு தருக.**

| நாள் | விவரம் | பே.ப.எ. | பற்று ரூ | வரவு ரூ |
|---|---|---|---|---|
| 31 மார்ச் 2004 | இ/ந க/கு ப.<br>கடனாளிகள் மீதான தள்ளுபடி ஒதுக்கு க/கு<br>(கடனாளி மீதான தள்ளுபடி ஒதுக்கு) | | 900 | 900 |

**53. 2004 மார்ச் 31ஆம் நாளன்றைய இருப்பாய்வின் படி பற்பல கடனாளிகள் ரூ.45,000. சரிக்கட்டுதல் : கடனாளிகள் மீது 2%தள்ளுபடி ஒதுக்கு உருவாக்கப்பட வேண்டும். இது இறுதிக் கணக்கில் எவ்வாறு தோன்றும்.**

**ப. 31.03.2004க்கான இ/ந க/கு வ.**

| விவரம் | | தொகை ரூ | விவரம் | | தொகை ரூ |
|---|---|---|---|---|---|
| கடனாளிகள் மீதான தள்ளுபடி ஒதுக்கு | | 900 | | | |

**31.03.2004க்கான இருப்பு நிலைக் குறிப்பு**

| பொறுப்புகள் | | தொகை ரூ | சொத்துக்கள் | தொகை ரூ | தொகை ரூ |
|---|---|---|---|---|---|
| | | | பற்பல கடனாளிகள்<br>(-) வாரா ஐயக்கடன் | 45000<br>900 | <br>**44100** |

**54. கடனீந்தோர் மீதான தள்ளுபடி ஒதுக்கு:** 1. கடனாளிகளுக்கு ரொக்கத் தள்ளுபடி வழங்கப்படுவது போன்றே, நிறுவனம் கடனீந்தோருக்கு தொகையை உரிய நாளில் செலுத்துவதால் ரொக்கத் தள்ளுபடி பெற இயலும். 2. பற்பல கடனீந்தோர் மீது ஒரு குறிப்பிட்ட சதவீதம் கடனீந்தோர் மீதான தள்ளுபடி ஒதுக்குக்காகக் கணக்கிடப்படுகிறது.

**55. கடனீந்தோர் மீதான தள்ளுபடி ஒதுக்கு இறுதிக் கணக்கில் எங்கு தோன்றும்**: 1. இலாபநட்டக் கணக்கின் வரவுப் பக்கத்திலும், 2. பற்பல கடனீந்தோரிலிருந்து கழிக்கப்பட்டு, இருப்புநிலைக் குறிப்பின் பொறுப்புகள் பக்கத்திலும் தோன்றும்.

**56. 31.3.2004 அன்றைய இருப்பாய்வின்படி பற்பல கடனீந்தோர் ரூ.50,000. சரிக்கட்டுதல் : கடனீந்தோர் மீது 2% தள்ளுபடி ஒதுக்கு உருவாக்குக. இதற்கான சரிக்கட்டுப் பதிவு தருக.**

| நாள் | விவரம் | பே.ப.எ. | பற்று ரூ | வரவு ரூ |
|---|---|---|---|---|
| 31 மார்ச் 2004 | கடனீந்தோர் மீதான தள்ளுபடி ஒதுக்கு க/கு ப.<br>இ/ந க/கு<br>(கடனீந்தோர் மீதான தள்ளுபடி ஒதுக்கு) | | 1000 | <br>1000 |

**57. 31.3.2004 அன்றைய இருப்பாய்வின்படி பற்பல கடனீந்தோர் ரூ.50,000. சரிக்கட்டுதல் : கடனீந்தோர் மீது 2% தள்ளுபடி ஒதுக்கு உருவாக்குக. இது இறுதிக் கணக்கில் எவ்வாறு தோன்றும்.**

**ப. 31.03.2004க்கான இ/ந க/கு வ.**

| விவரம் | | தொகை ரூ | விவரம் | | தொகை ரூ |
|---|---|---|---|---|---|
| | | | கடனீந்தோர் மீதான தள்ளுபடி ஒதுக்கு க/கு | | 1000 |

**31.03.2004க்கான இருப்பு நிலைக் குறிப்பு**

| பொறுப்புகள் | தொகை ரூ | தொகை ரூ | சொத்துக்கள் | | தொகை ரூ |
|---|---|---|---|---|---|
| பற்பல கடனீந்தோர்<br>(-) தள்ளுபடி ஒதுக்கு | 50000<br>1000 | <br>**49000** | | | |

## பாடம் : 1 இறுதி கணக்குகள் வினாக்கள்

**I.கீழ்க்கண்ட சரிக்கட்டுதல்களுக்கு சரிக்கட்டுப் பதிவுகள் தருக.**

**1.** கொடுபட வேண்டிய சம்பளம் ரூ.20,000.
**2.** முன்கூட்டிச் செலுத்திய காப்பீட்டு முனைமம் ரூ.400
**3.** முதலீடுகள் மீதான கூடியுள்ள வட்டி ரூ.1,000
**4.** முன்கூட்டிப் பெற்ற கழிவு ரூ.2,000
**5.** முதல் ரூ.5,00,000 மீது 10% வட்டி அனுமதிக்க
**6.** இறுதிச் சரக்கிருப்பு ரூ.4,00,000.
**7.** எடுப்புகள் மீதான வட்டி ரூ.5,000.
**8.** கடன் மீது கொடுபட வேண்டிய வட்டி ரூ.3,000.
**9.** இயந்திரம் ரூ.3,00,000 மீது 10% தேய்மானம் நீக்கப்பட வேண்டும்.
**10.** வாராக்கடன் போக்கெழுதுக ரூ.2,000.
**11.** பற்பல கடனாளிகள் ரூ.60,000 மீது 2% வாரா ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்கப்பட வேண்டும்.
**12.** பற்பல கடனீந்தோர் ரூ.1,00,000 மீது 2% தள்ளுபடி ஒதுக்கு உருவாக்கப்பட வேண்டும்.
**13.** வாடகை முன் கூட்டி பெற்றது. ரூ 5000
**14.** கொடுபட வேண்டிய கூலி ரூ.15000
**15.** அறைகலன் ரூ 50000 மீதான தேய்மானம் 5% நீக்கப்பட வேண்டும்.
**16.** போக்கெழுத வேண்டிய வாராக் கடன் ரூ 2500.
**17.** இருப்பாய்விற்கு (31.3.05) வெளியே சரிக்கட்டுதலில் இறுதிச் சரக்கிருப்பின் மதிப்பு ரூ.2,50,000 எனக் காட்டப்பட்டுள்ளது.
**18.** 2005 மார்ச் 31ஆம் நாளைய இருப்பாய்வின்படி சம்பளம் கொடுத்தது ரூ.1,50,000. மார்ச் 2005க்கான சம்பளம் ரூ.4,000 இன்னமும் கொடுபடவில்லை.
**19.** 31.3.05 அன்றைய இருப்பாய்வு ரூ.40,000 காப்பீட்டு முனைமம் செலுத்தியதாக காட்டியது. முன்கூட்டிச் செலுத்திய காப்பீட்டு முனைமம் ரூ.5,000.
**20.** 31.3.05அன்றைய இருப்பாய்வின்படி கழிவுபெற்றது ரூ.10,000.கூடியுள்ளகழிவு இன்னமும் பெறாதது ரூ.4,000.
**21.** 31.3.05 அன்றைய இருப்பாய்வின்படி வாடகை பெற்றது ரூ.30,000. முன்கூட்டிப் பெற்ற வாடகை ரூ.6,000.
**22.** 31.3.05 அன்றைய இருப்பாய்வின் படி முதல் ரூ.6,00,000. முதல் மீது வட்டி 6% அனுமதிக்க.

II பின் வரும் சரிக்கட்டுப் பதிவுகளில் விடுபட்ட பதிவுகளை நிரப்புக:

| வரிசை எண் | நாள் | விவரம் | பே.ப.எ. | பற்று ரூ. | வரவு ரூ. |
|---|---|---|---|---|---|
| 1. | 31.03.02 | ……… க/கு ப.<br>எடுப்பு மீதான வட்டி க/கு<br>(எடுப்பு மீதான வட்டி) | | 5000 | ---------- |
| 2 | | கடன் மீதான வட்டி க/கு ப.<br>………. க/கு<br>(கடன் மீது வட்டி கொடுபட வேண்டியது) | | 3,000 | ……. |
| 3. | | தேய்மானம் க/கு ப<br>…………. க/கு<br>(இயந்திரம் மீது தேய்மானம்) | | …… | 20000 |
| 4. | | வாராக் கடன் க/கு ப<br>……………….. க/கு<br>(வாராக்கடன் போக்கெழுதியது) | | 2000 | …….. |
| 5. | | ………………… க/கு ப<br>வாரா ஐயக்கடன் ஒதுக்கு க/கு<br>(2% வாரா ஐயக்கடன் ஒதுக்கு) | | 1200 | ……… |
| 6. | | கடனீந்தோர் மீதான தள்ளுபடி ஒதுக்கு க/கு ப<br>………………… க/கு<br>(கடனீந்தோர் மீது 2% தள்ளுபடி ஒதுக்கு) | | …….. | 1500 |
| 7. | | சம்பளம் க/கு ப<br>------------------------------------------ க/கு<br>(கொடுபட வேண்டிய சம்பளம்) | | 20,000 | ……. |
| 8. | | ……………………. க/கு ப.<br>காப்பீட்டு முனைமம் க/கு<br>(முன்கூட்டிச் செலுத்திய காப்பீடு) | | …… | 400 |
| 9. | | கூடியுள்ள வட்டி க/கு ப<br>……………. க/கு<br>(முதலீடுகள் மீது கூடியுள்ள வட்டி) | | 2,000 | …… |
| 10. | | பெற்ற கழிவு க/கு ப<br>……………………. க/கு<br>(கழிவு முன் கூட்டிப் பெற்றது) | | 1,000 | …….. |
| 11. | | ……………. க/கு ப<br>முதல் க/கு<br>(முதல் மீது 10% வட்டி) | | …… | 50000 |
| 12. | | இறுதிச் சரக்கிருப்பு க/கு ப<br>………… க/கு<br>(இறுதிச் சரக்கிருப்பு பதியப்பட்டது) | | 4,00,000 | ……. |

**III. கீழ்க்காணும் சரிக்கட்டுதல்களுக்கு, சரிக்கட்டுப் பதிவுகளும், மாற்றுப் பதிவுகளும் தருக.**

1. எடுப்புகள் மீதான வட்டி ரூ.5,000.
2. இயந்திரம் மீதான தேய்மானம் ரூ.4,000.
3. போக்கெழுத வேண்டிய வாராக்கடன் ரூ.2,000.
4. முதல் ரூ.5,00,000 மீது 10% வட்டி அனுமதிக்க

**IV. பின் வரும் நடவடிக்கைகள் இறுதிக்கணக்குகளில் எவ்வாறு தோன்றும் ?**

1. 2004 மார்ச் 31ஆம் நாளைய இருப்பாய்வின் படி கடனாளிகள் ரூ.12,000 மற்றும் வாராக்கடன் ரூ.300.
2. 2004 மார்ச் 31 ஆம் நாளைய இருப்பாய்வு படி பற்பல கடனாளிகள் 40,800 வாராக் கடன் போக்கெழுதியது 1,400 சரிக்கட்டுதல் : வாராக் கடன் ரூ.800 போக்கெழுதுக.
3. பற்பல கடனாளிகள் ரூ. 64,000 வாராக்கடன் ரூ. 1,200 வாரா ஐயக்கடன் ஒதுக்கு ரூ. 2,800 சரிக்கட்டுதல்கள் : பற்பல கடனாளிகள் மீது 5% வாரா ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்குக.
4. பற்பல கடனாளிகள் 60,000 வாராக்கடன் 5,000 வாரா ஐயக் கடன் ஒதுக்கு 10,000 சரிக்கட்டுகள் : பற்பல கடனாளிகள் மீது 5% வாரா ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்குக.
5. இருப்பாய்விற்கு (31.3.05) வெளியே சரிக்கட்டுதலில் இறுதிச் சரக்கிருப்பின் மதிப்பு ரூ.2,50,000 எனக் காட்டப்பட்டுள்ளது.
6. 2005 மார்ச் 31ஆம் நாளைய இருப்பாய்வின்படி சம்பளம் கொடுத்தது ரூ.1,50,000. மார்ச் 2005க்கான சம்பளம் ரூ.4,000 இன்னமும் கொடுபடவில்லை.
7. 31.3.05 அன்றைய இருப்பாய்வு ரூ.40,000 காப்பீட்டு முனைமம் செலுத்தியதாக காட்டியது. முன்கூட்டிச் செலுத்திய காப்பீட்டு முனைமம் ரூ.5,000.

**8.** திரு.அசோக்கின் 2002 மார்ச் 31ஆம் நாளைய இருப்பாய்வு விவரம்

| விவரம் | பற்று ரூ | வரவு ரூ |
|---|---|---|
| பற்பல கடனாளிகள் | 2,01,200 | |
| வாராக்கடன் | 9400 | |
| வாரா ஐயக் கடன் ஒதுக்கு | | 24,000 |
| கடனாளிகள் மீதான வட்ட ஒதுக்கு | | 1,200 |
| அளித்த தள்ளுபடி | 18,600 | |

சரிக்கட்டுதல்கள் : 1. வாராக் கடன் ரூ.4,800 கூடுதலாகப் போக்கெழுதுக.
2. கடனாளிகள் மீது 10% வாரா ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்குக.
3. கடனாளிகள் மீது 2% தள்ளுபடி ஒதுக்கு உருவாக்குக.

**9.** 31.3.05 அன்றைய இருப்பாய்வின்படி கழிவு பெற்றது ரூ.10,000.கூடியுள்ள கழிவு இன்னமும் பெறாதது ரூ.4,000.

**10.** 31.3.05 அன்றைய இருப்பாய்வின்படி வாடகை பெற்றது ரூ.30,000. முன்கூட்டிப் பெற்ற வாடகை ரூ.6,000.

**11**. 31.3.05 அன்றைய இருப்பாய்வின் படி முதல் ரூ.6,00,000. முதல் மீது வட்டி 6% அனுமதிக்க.

**12.** இருப்பாய்விற்கு (31.3.05) வெளியே சரிக்கட்டுதலில் இறுதிச் சரக்கிருப்பின் மதிப்பு ரூ.2,50,000 எனக் காட்டப்பட்டுள்ளது.

**13.** 2005 மார்ச் 31ஆம் நாளைய இருப்பாய்வின்படி சம்பளம் கொடுத்தது ரூ.1,50,000. மார்ச் 2005க்கான சம்பளம் ரூ.4,000 இன்னமும் கொடுபடவில்லை.

**14.** 31.3.05 அன்றைய இருப்பாய்வு ரூ.40,000 காப்பீட்டு முனைமம் செலுத்தியதாக காட்டியது. முன்கூட்டிச் செலுத்திய காப்பீட்டு முனைமம் ரூ.5,000.

**15.** 31.3.05 இருப்பாய்வின் படி கழிவு பெற்றது ரூ.10,000. கூடியுள்ள கழிவு இன்னமும் பெறாதது ரூ.4,000.

**16.** 31.3.05 அன்றைய இருப்பாய்வின்படி வாடகை பெற்றது ரூ.30,000. முன்கூட்டிப் பெற்ற வாடகை ரூ.6,000.

**17.** 31.3.05 அன்றைய இருப்பாய்வின் படி முதல் ரூ.6,00,000. முதல் மீது வட்டி 6% அனுமதிக்க.

**18.** 31.3.03 அன்றைய இருப்பாய்வு கீழ்க்கண்டவற்றை வெளிப்படுத்துகிறது. முதல் ரூ. 6,00,000 எடுப்புகள் ரூ. 50,000 எடுப்புகள் மீதான வட்டி 5% அனுமதிக்க.

**19.** 31.3.04 அன்றைய இருப்பாய்வின் படி

| விவரம் | பற்று ரூ | வரவு ரூ |
|---|---|---|
| வங்கிக்கடன் 10% (1.4.03) | ------ | 10,00,000 |
| வட்டி கொடுத்தது | 60000 | -------- |

கொடுபட வேண்டிய வட்டிக்கு வகை செய்க.

**20.** 31.3.98 அன்றைய இருப்பாய்வு கீழ்க்காணும் விவரங்களைத் தருகிறது.

| விவரம் | பற்று ரூ | வரவு ரூ |
|---|---|---|
| முதல் | ------ | 5,00,000 |
| எடுப்பு | 50000 | -------- |

எடுப்பு மீது வட்டி 5% அனுமதிக்க.

**21.** முதலீடுகள் மீது கூடியுள்ள வட்டி ரூ.2,000.

**22.** கொடுபட வேண்டிய கூலி ரூ.15,000.

**23.** கடன் மீதான வட்டி கொடுபட வேண்டியது ரூ.5,000.

**24.** எடுப்புகள் மீதான வட்டி ரூ.10,000.

**25.** அறைகலன் ரூ.50,000 மீது 5% தேய்மானம் நீக்கப்பட வேண்டும்.